உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி. க. } சௌமிய௵ ஆடி௴ { பகுதி. ச.

வேதம் ஓதுமுன் விபூதி பெறுதல்

(:o:)

"தம்மல ரடிபொன் றடியவர் பரவத் தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழற்சேர, அம்மலர்க் கொன்றை யணிந்தவெம் மடிக ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே" எனவும், "ஆரிய முந்தமி ழும்முட னல்கிக், காரிகையார்க்குங் கருணைசெய்தானே" எனவும், "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத், திடமுடைய தமிழ் மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங், குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகர்" எனவும் வரும் திருவாக்குக்களானே ஆரிய மொழியுந் தமிழ்மொழியும் ஆதியிற் பரமசிவனாற் றோற்றுவிக்கப் பட்டு நடைபெறுந் தெய்வமொழிகளாகுமென்பது தெற்றெனவிளங்கும். அன்றியும்,

"திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளுங் குன்றமெறிந்த குமரவேளும் அகத்தியனாரோடு தலைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார்" என இறையனார் களவியலுரையுள் வருதலானும் மற்றும் பற்பல அற்புதப்பிரமாணங்களானும் தென்மொழியின் றெய்வத்தன்மை தெள்ளிது துணியப்படுவதொன்றாம்.

ஆரியத்தில் இறைவன் திருவாக்கென விளங்கும் இருக்கு முதலிய நான்கும் வேதமென வழங்கப்படும். அவ்வாறே பாசமனைத்தி

னு நீங்கி விளங்கிய ஆளுடைய பிள்ளையார் முதலிய சமயாசாரியர்கள் தூய அறிவின் மேம்பட்டுவிளங்கிய சிவசத்தி அத்துவித இயைபான் மற்றதனைப் பிரேரித்தக்கால் ஆண்டு நின்று நாதவடிவாயும், அதன்பின் விந்துவடிவாயும், அதன்பின் அக்கரவடிவாயும்தோன்றின கடவுண் மொழியாகலின், தேவார திருவாசகாதி மெய்ந்நூல்களைத் 'தமிழ்வேத'மெனவும், 'திருமுறை'யெனவும் கொண்டு ஆன்றோர்போற்றுவராயினர். இதனை:— " எனதுரை தனதுரை யாகநீறணிந் தேறுகந்தேறிய நிமலன் " என்னும் ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமான் றிருவாக்கானும், "பன்னியநூற் றமிழ்மாலை பாடுவித்தென், சிந்தைமயக் கறுத்ததிரு வருளினானை " என்னும் ஸ்ரீ வாகீசப்பெருமான் றிருவாக்கானும், " எல்லையிலா மறைமுதன்மை யுடனெடுத்த வெழுதுமறை—மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசிறப்ப " எனவும், " தரைத்தலத்தின் மிசைவீழ்ந்து தம்பிரான் திருவருளால் உரைத்தமிழ்மாலைகள்சாத்து முணர்வுபெற வுணர்ந்துரைப்பார் " எனவும், "தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்—செம்பொருளாற் றிருத்தொண்டத் தொகையான திருப்பதிக—மும்பர்பிரான் றானுணரு முணர்வுபெற வுலகேத்த—வெம்பெருமான் வன்றொண்டர் பாடியவ ரெதிர்பணிந்தார்" எனவும், ஸ்ரீஅருண்மொழித்தேவர் கூறியருளுதலானும் " வண்டுபோற் புண்டரீக மலரின் விளைசிவாநந்த மதுவை வாரி—யுண்டுவா சகம்பாடி " எனவரும் ஆலவாய்ப் புராணத்திருவாக்கானும் நன்கு துணியப்படும். அன்றியும், " எழுதுமாமறை யாம்பதிகத்திசை—முழுதும்பாடி முதல்வனைப் போற்றி " எனவும், மிக்கசொற்றமிழினால் வேதமும் பாடினார் " எனவும், " விருப்புடன் பாட லிசைத்தார் வேதந் தமிழால் விரித்தார் " எனவும், தமிழ்வேதம் பாடினார் தாளப்பெற்றார் " எனவும், பன்னிரண்டாந்திருமுறையுள் ஸ்ரீ அருண்மொழித்தேவர் கூறியருளுதலானும் அவை யிற்றைத்தமிழ் வேதமெனக்கூறுதல் மரபேயாம் என்பது தெள்ளிது கூறததகும.

இத்தமிழ் வேதங்களால் நிகழ்ந்த அற்புதச்செய்திகள் பலவாம். அவற்றை யெண்ணுந்தோறும் கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள் தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாயுமன்றோ? இவற்றினருமைகளை யுணர்ந்தே

“புனலிலேடெதிர்செல்லெனச்செல்லுமேபுத்தனார்தலைதத்தெனத்தத்துமே
கனலிலேயிடப்பச்சென்றிருக்குமே கதவுமாமறைக்காட்டிலடைக்குமே
பனையிலாண்பனைபெண்பனையாகுமேபழையவென்புபொற்பாவையதாகுமே
சினவராவிடந்தீரெனத்தீருமே சிறந்தசம்பந்தர்செந்தமிழ்ப்பாடலே.”

“தலைகொணஞ்சமுதாகவிளையுமே தழலினீறுதடாகமதாகுமே
கொலைசெயானைகுனிந்துபணியுமே கூராவிடந்தீரெனத்தீருமே
கலைகொள்வேதவனப்பதிதன்னுளே கதவுமீண்டுகடுகத்திறக்குமே
அலைகொள்வாரியிற்கல்லுமிதக்குமே அப்பர்போற்றுமருந்தமிழ்ப்பாடலே.”

“வெங்கராவுண்டபிள்ளையைநல்குமே வெள்ளைவாரணமீதிலிருத்துமே
மங்கைபாகரைத்தூதுநடத்துமே மருவியாறுவழிவிட்டுநிற்குமே
செங்கலானதுதங்கமதாகுமே திகழுமாற்றிட்டசெம்பொனளிக்குமே
துங்கவாம்பரிசேரற்குநல்குமே துலங்குநாவலூர்ச்சுந்தரர்பாடலே”.

“பெருகும்வையைதனையழைப்பிக்குமேபிரம்படிக்குப்பிரான்மேனிகன்றுமே
நரியெலாம்பரியாகநடத்துமே நாடிமூகைதனைப்பேசுவிக்குமே
பரிவிற்பிட்டுக்குமண்சுமப்பிக்குமே பரமனேடெழுதக்கோவைபாடுமே
வருகும்புத்தரைவாதினில்வெல்லுமே வாதவூரர்வழங்கியபாடலே.”

என்று போற்றிக் கூறியருளுவர் பெரியார்.

ஆரிய நான்மறை யுபநிடதங்களும் அருந்தமிழ்வேத மாந்திருமுறைகளும் மொழியான் வேறு பாடுற்றுத் தோன்றுவன வல்லது பொருளான் வேறுபாடுறுதலில்லையாதலை

“ தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர் ”

என்னும் ஔவைப்பிராட்டியார் திருவாக்கானே பசுமரத்தாணி போல் நாட்டலாமென்க.

இங்ஙனமாகத் தமிழ்வேதத் திருமுறைகள் திருவருட் சுருதியாதல் நோக்கியே பண்டைக்காலந்தொட்டு மெய்யுணர்வுடைய சான்றோர் அவையிற்றைப் பரார்த்த ஆன்மார்த்த சிவாராதனைக்குரிய மந்திரவோத்தாக விதித்தருளி அவ்வாறே என்றும் வழங்கிவர ஆணை தந்தருளினர்.

இவ்வுலகத்தில் மூர்த்தி மகிமையும், தீர்த்த மகிமையும், தலமகிமையும் பெற்றுள்ள சிவாலயங்கள் பலவுண்டேனும் அவற்றுள்

வைத்துத் தமிழ்வேதம் பாடப்பெற்ற தலங்களையே மிகச்சிறந்தனவாகக்கொண்டு பாராட்டுதல் இக்காலத்தும் பிரசித்தமன்றோ?

இவ்வாறாக ஒப்புயர்வகன்ற திப்பியத் தமிழ் மறைகளைச் சிவாலயங்களில் பூசா காலங்களில் முடிவில் ஓதுவித்து அதன்பின்னர் கற்பூர தீபாராதனை செய்வித்தலும் அத்துடன் பூசை முற்றுதலுமாகக்கொண்டு போற்றுதலும் தமிழ்நாடெங்கும் தொன்றுதொட்டு இன்றுவரையும் நடந்துவருவதொன்றாம். இங்ஙனம் தமிழ்வேதமோதும் ஓதுவார்கட்கு விசேஷ மரியாதையும் முற்றூட்டாகக் கிராமங்களும் ஆங்காங்கு பண்டையரசர்களால் அளிக்கப்பெற்றிருப்பதும் யாவரும் நன்கறிவர்.

இவ்வாறிருக்க ஆரியர்கள் தமிழ்ப் பாஷையைச் சூத்திர பாஷையெனக் கொண்டு அவமதிப்பவராகித் தமிழ்நாட்டில் பல இடங்களினும் தமக்குச் செல்வாக்கு மிகப் பெற்றிருத்தலால் திருமுறைகளையும் சூத்திரபாஷை யென வுட்கொண்டு சற்றுப் புறக்கணிக்கத் தொடங்கிச் சில சிவாலயங்களில் பூசாகாலங்களில் சோடசோபசார முடிந்து ஆரியவேத பாராயண தீபாராதனை யானவுடன் தமக்கு விபூதிப் பிரசாதங் கொடுக்கச் செய்து தமிழ்வேத பாராயணத்தை உற்றுக் கேளாது ஒதுக்குவராயினர். அர்ச்சகர்களாகிய ஆதி சைவர்களோ பிரபல செல்வாக்குற்ற அந்தணர் கருத்துப்படியே தேவாரமோது முன் அவர்க்குப் பிரசாத மீவாராயினர். ஏனைய அதிகாரிகளும் கவனக்குறைவால் வாளாவிருந்து வந்தனர். திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை முதலிய சைவாதீன மடாதிபதிகள் பரிசீலனையிலிருக்கும் சில சிவாலயங்களில் மட்டும் தமிழ்வேதபாராயண தீபாராதனை முடிந்த பின்னரே முறையாக அந்தணர் முதலிய யாவர்க்கும் விபூதிப் பிரசாதங் கொடுக்கும் வழக்கமிருக்கின்றது. ஏனைய பல திருக்கோயில்களில் இவ்வழக்கம் அறவேயொழிந்தது. இதனைக் கவனிப்பாரும் இல்லை. இதனால் வருங் குறைகள் பலவாம். தமிழ்வேத மோதல் சிவாராதனைக்கு ஒரு அங்கமாயிருக்க அது முற்று முன்பு ஆராதனை குறைவாயிருக்கும் போதே விபூதிப் பிரசாதங் கொடுத்தலும் கொள்ளலும் குற்றமன்றோ? பூசைக்கிரியை முழுதும் நிறைவேறிய பின்னர்தானே பிரசா

தம் பெறுதல் தகுதி. இந்த முறையை யாவர்தான் மறுப்பார்? அன்றியும் தமிழ்வேத மோதிக் கொண்டிருக்குங்கால் ஒரு கூட்டத்தார்க்கு விபூதி முதலிய பிரசாதங் கொடுத்தல் நிகழ்வுழிப் பல்லோர் வாய்ச்சத்தமெழுந்து தமிழ்வேத வொலியை மறைப்பதும் விபூதி பெற்ற பலர் ஆலயத்தை விட்டு வெளிச் செல்லலும ஆகிய அசம்பவங்களும் நிகழ்கின்றன. சில சமயங்களில் தமிழ்மோதி முடிவுற்றவுடன் தீபாராதனை செய்ய முடியாமல் பிராமணர்க்கு விபூதி முதலிய பிரசாதங் கொடுத்துக் கொண்டிருக்கும் பட்டர் அவ்வேலையை முடித்த பின்னர் வந்து கற்பூர தீபாராதனை செய்ய நேரிடுகின்றது. இவற்றால் தமிழ் வேதப் பெருமைக்குக் குறைவுண்டா மென்பதை யாவரே யறியார்? சோடசோபசாராதி பூசை முடியும்வரை காத்திருந்த அந்தணர்கள் தமிழ்வேத மோதும் சில நிமிஷகாலம் தாமதித்தால் வருங் குறையென்னே? இதனால் அவர்கட்கு வரும் இழுக்கென்னே? ஆதியில் தமிழ்வேதத்துக்கு எத்துணையோ பெருமைகளை யேற்படுத்தி ஓதுவார்கட்கும் மிக்க மரியாதைகளை யேற்படுத்தி வந்திருக்க இடையே இந்த முறையற்ற வழக்கம் சில இடங்களில் எவ்வாறோ நுழைந்துவிட்டது. இதைப்பற்றி யாம் கல்வியறிவிற் சிறந்த உத்தம வேதியர்கள் பலரிடம் அளவளாவினேம். மேற்கூறிய நியாயங்களை அவர்கள் ஒப்புக்கொண்டு இவ்வழக்கத்தை நிறுத்தித்தமிழ்வேதம் ஓதிக் கற்பூர தீபாராதனை முடிந்த பின்னர் தான் விபூதி பெறவேண்டும் என்றும்,ஆங்காங்குள்ள பெரியார் பலர் இதனைப்பேசி முறைப்படுத்த வேண்டுமென்றும் இணங்கிக் கூறினரேயன்றிப் பிணங்கிக் கூறுவாரெவருமில்லை. தேவாலய பரிபாலகரான கமிட்டியார்களும் மற்றும் சைவாபிமானிகளும் நன்கு சூழ்ந்து தமிழ்வேத மோதி முடிவுற்றபின்னரே யாவர்க்கும் விபூதிப் பிரசாதங் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்யவேண்டுவது அவசியமானகாரியம். சைவாபிமானமும் தமிழபிமானமுங் கொண்டுள்ள தக்கவர்கள் பலரும் கவனிப்பார்களாக. இன்னும் சமயம் வாய்த்தபோது இதைப்பற்றிப் பேசுவோம்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

---

* பச்சோந்தி.

தேசசஞ் சாரம் செய்பவர் இருவர்
சரச மாகச் சல்லா பிக்கையில்
ஓரொரு சமயம் ஓரொரு செய்தியைப்
பற்றிப் பேசினர்; மற்றவற் றிடைப் பச்
சோந்தியின் இயல்பையும் உருவையும் குறித்துச்
சற்று நேரம் சம்பா ஷித்தனர்:

"இதனினும் விநோதசெந் தெதுவும்என் றென்றுமே
சூரியன் ஒளிபடும் பாரிடந் தன்னிலே
இருந்த தில்லை என்பது திண்ணம்.
பல்லியின் நீண்ட மெல்லிய உடலும்,
மச்சத் தலையும், ‡கட்செவி நாக்கும்
இதற்கிருக் கின்றன. இதனுடைப் பாதமோ
முக்கவர் ஆகி முந்நகம் கொண்டது.
எத்துணை நீளவால் இதன்பின் னம்புறம்!
அன்றியும் இதன்நிறம்?-ஆ! ஆ! இதைப்போல்
நேர்த்தி யான நீல நிறத்தினை
யாரே பார்த்துளர்?" என்றனன் ஒருவன்.

" அத்துடன் நிறுத்தும். அதன்நிறம் பச்சையே.
சின்னாழிகைக்குமுன் திறந்தவா யுடன்அது
கதிரவன் ஒளியிற் காய்ந்துகொண் டிருக்கையில்
எனதிவ் விழிகளால் யான்அதைப் பார்த்தேன்.

---

* இது James Merrick என்ற ஆங்கிலப்புலவர் இயற்றியுள்ள "The Chameleon" என்பதன் தமிழ் மொழிபெயர்ப்பு.

‡ கட்செவி—பாம்பு.

அனா யாசமாய் அதுதன் உடம்பைக்
கிடத்தி நீட்டிப் படுத்திருக் குங்கால்
அதனை நோக்கினேன். அந்தப் பொழுது
காற்றை உண்ணக் கண்டேன்” என்று
மற்றவன் விரைவில் மறுமொழி அளித்தனன்.

அளித்தலும், முன்னவன், “ஐயா! யானும்
நம்மைப் போலவே நோக்கியுள் ளேனல்
அதன்நிறம் நீலமே ஆமென உறுதியாக்
கூறத் துணிவேன்.” குளிர்ச்சி யாயுள்ள
நீழலி லேஅது நீட்டிக் கிடக்கையில்
சாவ காச மாஅதைப் பார்த்தேன்.
”
என்றனன்.

என்னலும், பின்னவன், “ஐயா!
பச்சையே அன்னது; பச்சையே அனனது.
நிச்சயமாக நிகழ்த்துவேன்” என்றனன்.
முன்னவன்கோபம் மூண்டவனாகி
ஐயா! பச்சையா! அழகிது! யான்இரு
கண்ணும் இலான்எனக் எண்ணினீர் கொல்லோ?”
என்னலும்,

அவனைப் பின்னவன் நோக்கி
“இந்தப்படியே எந்தச்சமயமும்
உம்முடை விழிகள் உதவிடுமாயின்,
அவை பயன் அற்றவையாகவே இருக்கக்
காண்பீர் ஆதலால், கண்இல் லாமையால்
அதிக நஷ்டம் ஆய்விடா” தென்றனன்.

இவ்வாறிருவரும் இயைந்து வராமையால்
வாக்கு வாதம் வரவர முற்றி
அடிபிடி சண்டை யாக்தறுவாயில்
அதிர்ஷ்ட வசமா ஆங்கே மூன்றும்

மனிதன் ஒருவன் வந்தனன். அவனிடம்
வாதவிஷயம் ஈதெனக் கூறி
அதன்நிறம் பச்சை அல்லது நீலம் என்
றவன் அறிந்திருப்பானாயின் தங்கட்
கியம்புமா றவனை * இரந்தனர் இருவரும்,

அப்பொழுது மனிதன்: "ஐயன்மீரே!
சச்சரவொழிமின். இச்செந்துவினுடை
நிறம் பச்சையும் இலை நீலமும் இல்லை.
ஏனெனில் நேற்றிரா இப்பிராணியைப் பிடித்
தோர் விளக்கொளிமுன் உற்றுப் பார்த்தேன்
நன்றாய் அதனை நான் கவனித்தேன்.
அதுகன்னங்கரேலாகவே இருந்தது.
வெறிக்குப் பார்ப்பதன் விவரம் யாதோ?
ஐயன்மீர்! யான் அறைவதை நம்ப
இசையீராயின், இன்னும் அச்செந்து
என்கை வசமே இருப்பதால் அதனை
எடுத்துக் காட்ட என்னால் ஆம்" எனச்
சாற்றினன் சாற்றலும்,

"தயை செய்து ஐயா
அவ்வாறே செயும். அதன் நிறம் நீலமே
ஆம் என்பதற்கு என் ஆருயிர் பந்தயம்"
என்ன ஒருவன் இயம்பினன்.

"இதை நீர்
பார்க்குங்கால் அது பச்சை நிறத்தது
தான் என நீரே சாற்றுவீர்; சத்தியம்."
என மொழிந்திட்டான் இரண்டாம் பிராணி.

அப்பொழுது மனிதன் அவர்களை நோக்கி
"ஆனால் சரி; நம் ஐயம் தீர

* இரந்தனர்—கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர்.

ஓர் மிட்டாய்க்கடைக்காரன் கதை.

வடஇந்தியாவில் ஒருகிராமத்தில் மிட்டாய்க் கடைக்காரன் ஒருவன் இருந்தான். ஓர் தெருக் கடைசியில் அவன் வீடு. அதற்கடுத்தாற்போல மிட்டாய்க்கடை. அவன் கடை மிட்டாய் அதி சிலாக்கியமானது. மிகுந்த ருசியுள்ளது. அவனுக்கு அதனால் நல்ல வரும்படி. மிட்டாய்க் கடைக்காரனுக்கு ஒருமனைவியும் இரண்டு ஆண் குழந்தைகளும் உண்டு. தன் வீட்டுச் செலவுக்கு வேண்டிய பணம் போக மிகுதியை ஒருவரும் அறியாமல் நாடோறும் பத்திரப் படுத்தி வைத்திருந்தான்.

ஒருநாள் அவன் தன் கடையில் உட்கார்ந்திருந்தான். பகல் 15 நாழிகை இருக்கலாம். அப்பொழுது இலட்சணம் பொருந்திய சந்நியாசி ஒருவர் கந்தை உடை தரித்தவராய் வெயிலின் கொடுமை பொறுமல் நிழலுக்காக அந்தக் கடைக்குள் நுழைந்தார். சற்று இளைப்பாறிய பின் தாகவிடாய் தீரக் கொஞ்சம் தீர்த்தம் கேட்டார். உடனே அக்கடைக்காரன் மிட்டாய்களிற் சிறிதும் ஓர் சுத்தமான பாத்திரத்தில் குளிர்ந்த நன்னீரும் கொண்டுவந்து சந்நியாசிமுன் வைத்தான். சிரம பரிகாரமானவுடன் ஸாது, அவனை நோக்கி "அப்பா! நான் உடுத்திருக்கும் வஸ்திரமோ கந்தை; அதில் பல துவாரங்கள் இருக்கின்றன. அவற்றின் வழியாகக் கொசுகுகள் புகுந்து மிக வருத்தப்படுத்துகின்றன. ஆதலால் இவ்வஸ்திரத்தைத் தைத்துச் சீர் பண்ணிக் கொடுப்பையா?" என்றார்.

அந்த மிட்டாய்க் கடைக்காரன் நல்லவன். பெரியவர் உத்தரவைச் சிரசால் வகித்து, உருவமற்ற அக்கந்தையை மூன்றுமணி நேரத்திற் பழுதுபார்த்து துவாரமேதுமின்றித் தைத்து ஓர் உருவாக்கி அச்சாதுவினிடம் கொடுத்தான். அன்றிரவு சந்நியாசி சுகமாக நித்திரை செய்தார். மறுநாட்காலை மிட்டாய்க் கடைக்காரன் தன் கடையிலுட்கார்ந்து வியாபாரம் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது பெரியவர் அவன் முன்னேவந்தார். அவனிடம் இனியும் ஏதேனும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு அவர்

இங்கு வரவில்லை. அவன் செய்த நன்மைக்கு ஏதேனும் கைம்மாறு செய்யக் கருதியே அங்குவந்தார். ஆயினும் அவர் பணம் காசுகொடுக்கக்கூடாதவர். ஏனென்றால் அவர் "மண், பெண், பொன்" இவற்றை முற்றத் துறந்தவர். அவர் பிரமத்தோடு ஏகைக்கிய பாவமாய் லயித்தவர், அவர் உலக இன்பத்தைக் காட்டிலும் உயர்ந்த இன்பம் கொடுக்க யோக்கியதையும் சக்தியும் உடையவர். அவர்போன்ற ஸாதுக்கள் பிரபஞ்ச வாழ்க்கையின் சுகதுக்கங்களாலும்,இன்ப துன்பங்களாலும் பிரதிபாதிக்கப் படாதவர்களே. இவர்களுக்கு இவ்வுலகத்தில் இருக்க ஏதுகாரிய மில்லாதவர்களாயிருப்பினும், ஜீவகாருண்யார்த்தமாகப் பிறர்க்கு உதவிசெய்து அவர்களைக் கைதூக்கி விடுவதற்காகவே இப்புவியில் சஞ்சரிப்பார்கள். இப்பெரியவர் தமக்குத் தாகவிடாய் தீர்த்த மிட்டாய்க் கடைக்காரனுக்குப் பேரின்பத்தில் நோக்கமில்லை யென்பதையும் இவ்வுலக இன்பத்திலேயே மெத்த நாட்டமுள்ளவன் என்பதையும் அறிந்தார். ஆகையால் அவனை "அப்பா! உன்னைக் கோலோகத்திற்குக் கொண்டுபோய் விடுகிறேன்; அவ்விடத்தில் இவ்வுலக இன்பங்களைப் பார்க்கிலும் ஏராளமான சுகமுண்டு. போக போக்கியங்களெல்லாம் அனுபவிக்கலாம்" என்றார்.

கடைக்காரன் அதைக்கேட்டு சிறிது ஆலோசனைசெய்து பிறகு பின்வருமாறு பெரியவரைப்பார்த்து வேண்டிக்கொண்டான்:--"சுவாமிகள்! தாங்கள் குறிப்பித்த புண்ணியமும் சுகமும் வாய்ந்த இடத்திற்கு யார்தான் புகவிரும்பார்? உயிர் நீங்கிய பின் இவ்விடதிற்குச் சென்றே சுகாநுபவங்களை அநுபவிக்கக் கருதியே மானிடர்கள் வீடு வாசல் பெண் பிள்ளைகளைத் துறந்து காட்டிற்குச் சென்று பெருந்தவம் புரிகிறார்கள். ஏ! தயாளுவே! தாம் எனக்குச் செய்யும் உதவி ஒப்பற்றது. ஆனாலும் தாம் எல்லாம் உணர்ந்த ஞானி. தமக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. எனக்கு இரண்டு சிறுவர்கள் இருக்கிறார்கள். அவர்களைத்தாமும் பார்த்தீர்கள். அச்சிறுவர்களுக்கு இவ்வுலகின்கண் என்னைதவிர உற்றதுணை யாருமில்லை. இவ்வேளையான் அவர்களை விட்டுப் போவேனானால் அவர்கள் அநாதைகளாய் திக்கற்றுத்திகைத்து துன்பப்படுவார்கள். அவர்கள் தங்கள் பாட்டைத் தாங்களே பார்த்துக்கொள்ள இன்னும் சில வருஷங்கள் செல்லும்

அதாவது இன்னும் எட்டுவருஷக் கணக்கு வைத்துக் கொள்வோம். அதுவரை பெரியமனது கூர்ந்து உத்தரவளித்தால் பேருதவியாயிருக்கும்." என்று இவ்வாறு விண்ணப்பித்துக் கொள்ள, ஸாது, "இவனுக்குப் பகவானையும் சுவர்க்க போகத்தையும் காட்டிலும் தன் பிள்ளைகளிடத்தில் மிகுந்த வாஞ்சை வைத்திருக்கிறனென்பதைத் தெரிந்துகொண்டு அவன்மே லிரக்கங் கொண்டவராய் எட்டுவருஷம் கழிந்தவுடன் திரும்பவருவதாக ஒப்புக்கொண்டு சென்றனர்.

எட்டு வருஷமும் கழிந்தன. குறித்த தவணையில் ஸாது வந்தார். அவரைக் கண்ட வுடனே மிட்டாய்க் கடைக்காரன் உடல் பதறிக் கைகால் நடுக்குற மிகத்தவித்து சாதுவின் மனமிரங்கப் பின்வருமாறு விண்ணப்பம் செய்தான். "ஓ மகானுபாவா! சர்வலோக நாதன் என்பேரில் தாங்கமுடியாத கஷ்டங்களை யெல்லாம் சுமத்தியிருக்கிறர். என் இரண்டுகுமாரர்களையும் பாருங்கள். எவ்வளவு துஷ்டர்களாய் விட்டார்கள்! நான் காப்பாற்றி வைத்திருந்த திரவியத்தில் பெரும்பாகத்தை மதுபானத்திலும், துன்மார்க்கத்திலும் துர்விநியோகஞ்செய்து அழித்துவிட்டார்கள். ஆகையால் அவர்கள் துர் நடவடிக்கைகளை ஒடுக்கி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டியது அவசியம். அதற்கு ஒருவழி தோன்றியிருக்கிறது. அதாவது, அவர்களுக்கு விவாகஞ் செய்வித்து கால்கட்டு கைக்கட்டுப் போட்டு விடவேண்டு மென்பதே. அவ்வாறு மணம் முடிப்பிக்கத் திரவியம் வேண்டும். அதை நானே தேட வேண்டியிருக்கிறது. ஆகையால் மகாப்பிரபுவே! இன்னும் ஓர் எட்டுவருஷம் கெடு கொடுக்க மன்றுடுகிறேன்" என்று இவ்வாறு வேண்ட, நன்மையிற் சிறந்த முதியவர், மௌனமாய், மேற்சொல்லியதைக் கேட்டு, இவனுக்கு எல்லாவற்றையும்விட குடும்பத்தில் மிகப்பற்றுதல் இருக்கிறது; ஏதுஇவன் பெரும்பேதையாய் இருக்கிறன்! ஆயினும் என்ன செய்யலாம்? நல்லது; இன்னுமெட்டு வருஷம் சென்று வருவோம், என்று எண்ணி அவ்வாறே வருவதாக ஒப்புக்கொண்டு சென்றுவிட்டார்.

எட்டுவருஷ கெடுவும் பறந்து சென்றது. குறித்த தினத்தில் சாதுவானவர் மிட்டாய்க்கடையை நெருங்கிவந்தார். அந்தோ!

கடையையேகாணோம். அது இருந்த விடத்தில் ஒரு சிறு கூரைக் கட்டானபலசரக்கு மளிகைக்கடையைக்கண்டார். அக்கடையில் மிட்டாய்க்கடைக்காரனைக்காணோம். அவனது மூத்தகுமாரன் கிராமத்து ஏழைக்குடிகளுக்கு சில்லறை சில்லறையாகச் சரக்கு விற்றுக்கொண்டிருந்தான். சாது அவன் பாற்சென்று அவனுடைய தகப்பனாரின் யோகக்ஷேமத்தை விசாரித்தார். அதற்கு அவன் "ஐயா!, ஐயோ! நான் என்ன சொல்வேன்! என் தந்தை இறந்து ஏழுவருஷமாயிற்றே. எங்களைத் துன்பசாகரத்தில் மூழ்க விட்டுப் போய்விட்டார். கையில் அரைக்காசு மற்றவராய் விட்டோம். முன்னிருந்த நேர்த்தியான கடை போய்விட்டது. இந்த ஒரு அற்பப் பலசரக்குக்கடைவைத்து ஜீவனம் பண்ணிவருகிறோம். அதோபாருங்கள்! என் தம்பி வயலில் ஏர்பிடித்து உழுது கொண்டிருக்கிறான்." என்றான்.

இம்மொழிகளைச் சாது மௌனமாய்க்கேட்டார். அவரோ மகான். திரிகாலஞானி. அவர் ஞான திருஷ்டியால் பார்த்தார். பிதாவான மிட்டாய்க் கடைக்காரன் இளைய குமாரன் ஏரில் பூட்டியிருந்த எருதுகளில் ஒன்றாகப்பிறந்து உழைத்துக் கொண்டிருந்தான். இதை அவர் கண்டுகொண்டார். எருதாய்ப்பிறந்த மிட்டாய்க்கடைக் காரனைப் பார்க்கக் கருதினார். மத்தியானம் எருதுகளைப் பூட்டவிழ்த்து விடுகிறவரை காத்து இருந்தார். இளையகுமாரன் எருதுகளைத் தும்புதறித்து கொட்டத்தில் கட்டிவிட்டு வீடுசென்றபின் சாது ஒருவருமில்லாத சமயம்பார்த்து அக்கொட்டகதிற்குள் சென்றார். சென்றதும் தமது கமண்டலத்தினின்றும் கொஞ்சம் நீரைக் கையிலெடுத்து மந்திர உச்சாடனம் செய்து மிட்டாய்க் கடைக்கார எருதின் தலையில் தெளித்தார். என்ன ஆச்சரியம்! உடனே அவ்வெருதுக்கு பூர்வஞானம் வந்துவிட்டது. சாது தான் தெடுப்பிரகாரம் அவனைக் கோலோகத்திற்குக் கொண்டுபோக வந்த விஷயத்தைத் தெரிவித்தார்.

இதைக் கேட்டமாத்திரத்தில் அவ்வெருது தலை வணங்கிப் பின்வருமாறு முறையிடலாயிற்று; "ஓ ஐயா! குறித்ததவணை இன்றுதான். அதில் சந்தேகமில்லை. தம் உள்ள மறியாதது என்ன இருக்கிறது? என் குடும்பத்தில் எங்கும் தரித்திரம் நிறைந்திருப்பதை

எளிதாய்ப் பார்த்திருப்பீர்கள். என் ஆஸ்திகளையெல்லாம் அதிர்ஷ்டவீனர்களாகிய என் மூடமக்களிருவரும் அழித்துவிட்டார்கள். இன்னும் ஒன்று இரண்டு வருஷம் இப்படியே செல்லுமாகில் சோற்றுக்கில்லாமல் பட்டினியாய் இறக்கவேண்டியது நிச்சயம். ஆகையால் இக்கொடுந்துறவாயில் நான் மாடாயிருந்து இன்னுங் கொஞ்சகாலம் உழைத்து உழுது வரும்படிதேடிக் கொடுத்தால் ஒருக்கால் மீண்டும் என்குமாரர்கள் நல்ல ஸ்திதிக்கு வரமாட்டார்களா! என்ற பேரவா என் மனதிற்குடிகொண்டிருக்கிறது. ஆகையால் தாம் கருணை கூர்ந்து இன்னும் சிலவருஷம் பொறுக்கக் கடவீர்" என்று இப்படிச்சொல்ல" இவற்றையெல்லாம் வாய்திறவாது ஆச்சரியத்துடன் கேட்டசாது, "ஏது! எவ்வித உபதேசமும் இவன்விஷயத்தில் பயன்படாது போலிருக்கிறதே. "கழுதைக்குபதேசம் காதிலேசொன்னாலும்" என்ற முதுமொழி இத்தடிக்கழுதை விஷயத்தில் உண்மையாயிற்று போலும். இவன் சம்சார பந்தத்தை விடுவது வெகு அருமை. ஆயினும் பார்ப்போம் இன்னும் கொஞ்சகாலம்." என்று எண்ணிச் சென்றார்.

(இன்னும்வரும்)

ம. ஜகதீசையர்.

தனிகர் தரித்திரரின் இலட்சணங்கள்.

[அ௯-வது பக்கத்தொடர்ச்சி.]

என்னலும், நான், "பரோபகாரமான நற்செய்கைகளுடன் கூடிய அவர்களை நீ இவ்வாறு குற்றம் சொல்வது தகுதியன்று." என்று சொல்ல, அதற்கு அவன் "ஐயா, நீர் சொல்வது சரியன்று. அவர்கள் தனத்திற்கு அடிமைகளேயன்றிவேறல்லர். மழை பெய்யாத கார்த்திகைமாத மேகத்தாற் பிரயோசனமென்ன? ஒளியைத்தராத சூரியனால் பயனுண்டோ? செல்வாக்கென்ற குதிரையிலேறியும் இவன் போகவேண்டிய இடத்திற்கு அவனை அது கொண்டு போய்ச் சேர்க்காவிடில் அப்புரவியாற் பயனென்ன? அவர்கள்

கடவுளை வழிபடுவதில் பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பாராமல் ஒரு வனுக்கும் உபகாரம் செய்யார். ஆனால் தனத்தை வெகு பிரயாசைப் பட்டுச் சேர்க்கிறார்கள். அதை யொருவருக்கும் கொடுக்காமற் காப் பாற்றுகிறார்கள். இதைப்பற்றி ஆன்ரோர் சொல்லியிருக்கிறதா வது "லோபியைத்தரையில் புதைக்கவும் அவனுடைய புதையலை த்தரையினின்று எடுக்கவும் ஒரே காலத்தில் நேரும். சிரமத்துடனும் பிரயாசையுடனும் ஒருவன் பணத்தைச்சேர்க்க, வருத்தமின்றியதை அனுபவிக்க மற்றொருவன் வருகின்றான்" என்றான்.

அது கேட்ட நான் "யாசகஞ் செய்கின்ற உனது அனுபோகத் தாலன்றி, வேறு விதத்தால் செல்வனுடைய லோபத்தை நீ யறிந் தவனல்லன். ஆனால் லோபத்தை நீக்கிய ஒருவன், உதாரகுணமுள் ளவனையும் உலுத்தனையும் யாதொரு வித்தியாசமின்றிக் காண்கி றான். உறைகல் தங்கத்தின் மாற்றைத் தெரிந்து கொள்ளுவது போல பிக்ஷுகன் லோபி இன்னானென்று தெரிந்து கொள்ளுகிறான்" என்றேன்.

அதற்குப் பக்கிரி "ஐயா நான் சொல்லுவதெல்லாம் அனுபோ கத்தால் நான் தெரிந்து கொண்ட விஷயம். செல்வர்கள் தங்களு டைய இழிவான வேலைக்காரர்களையும் முரடர்களான போக்கிரிகளை யும் தங்கள் தலைவாயில் காப்போர்களாக நியமித்து மரியா தைக்கருகர்களான மனிதரைக் கூட உள்ளே விடக்கூடாதென்று ஆக்ஞாபிக்கிறார்கள். அவர்களும் தங்கள் எஜமானர் ஆக்ஞைக்கு இணங்கி வித்துவான்களையும் ஞானிகளையும் கூட "வீட்டிலிருப்பவர் வெற்றாள்" என்று சொல்லிக்கொண்டு அவர்கள் மேல் கைபோட் டுப் புறம்பே தள்ளிவிடுகிறார்கள். வாஸ்தவத்தில் சேவகர்கள் சொல் லுவதிலும் உண்மையிருக்கிறது" என்றான்.

இது கேட்டு நான் "இவவாறு செய்வதற்கு அவர்களுக்கு நியா யமிருக்கிறது. ஏனெனில் எண்ணிறந்த ஜனங்கள் சிபார்சு கடிதங் களைக்கொண்டு வந்து அவர்களுக்குத் தொந்தரவு கொடுத்து யாசிக் கின்றார்களாகையால், தொந்தரவைப் பொறாமல் ஈற்றில் இவ்வாறு செய்யத் தீர்மானிக்கின்றனர். பேராசையுள்ள பிச்சைக்காரனுக்கு எவ்வளவு கொடுத்தாலும் அவனுக்குத்திருப்தி உண்டாகாது. பணி

பெய்து கிணறு நிரம்புமோ? வனாந்தரத்திலுள்ள மணலெல்லாம் முத்தாகி அதையெல்லாம் அவர்க்கே கொடுக்கினும் அவர்கள் திருப்தியடையமாட்டார்கள் ஹாதிம்தேய் என்ற மகான் வனாந்தரத்தில் வசிக்காமல் நகரத்தில் வசித்திருப்பாராயின், யாசகர்கள் அவன் மேலே அணிந்திருக்கும் சட்டையைக் கூட அபகரித்துக்கொள்வார்கள்." என்று சொல்லி முடித்தேன்.

தார்விஸ், "நீ சொல்லுகிறபடியிருக்குமாயின், செல்வர்களின் நிலைமை பரிதபிக்கத்தக்கதே" என்று பரிகாசமாய்ச்சொன்னான்.

அதற்கு நான், "நீ அவர்களின் நிலைமையைக்குறித்து வருத்தப்படுவதாகத் தோன்றவில்லை. ஆனால் நீ அதைப் பார்த்து அஸூயைப்படுகிறாய் என்று எண்ணுகிறேன்" என்றேன்.

இவ்வண்ணமாய் நாங்கள் ஒருவரோடொருவர் விவகரித்துக் கொண்டிருந்தோம். அவன் ஒரு காலாளை நகர்த்தினால் அதை மற்றொரு ஆளால் எதிர்ப்பேன். ஒரு காயை நகர்த்தி அரசென்றால் அதை மந்திரியால் மூடிக்கொள்வேன். இவ்வாறு செய்து கொண்டு கடைசியாய் அவன் புத்தியாகிய நாணயத்தையும் செலவிடவிட்டு அம்புக்கூட்டிலிருந்த விவகாரச்சரங்களனைத்தையும் எடுத்துத்தொடுத்து விட்டான். கடைசியாய்ப் பேசுவதற்கு ஒருவார்த்தையுமின்றி என்னால் முற்றிலும் அபஜயத்தையடைந்தான். அதனால் அவன் கோபாக்கிராந்தனாய்த்தாறுமாறாய்ப் பேச ஆரம்பித்தான். இது தான் மூடர்களுடைய இயற்கை. விவகாரத்தில் தன் எதிரியை ஜயிக்க முடியாவிட்டால் தடிகொண்டடிக்கப் புறப்படுவார்கள். அதுபோலவே அவன் என்னை ஏறுமாறாக வைய ஆரம்பிக்க நானுமவனைவைதேன். அவன் என் கழுத்துப்பட்டையை எட்டிப்பிடிக்க ஒருவரோடொருவர் மல்யுத்தம் செய்து ஒருவரையொருவர் கீழேதள்ளி ஊர்சிரிக்கப் புறண்டு கொண்டிருக்கையில் எல்லோரும் மூக்கின் பேரிலும வாயின்பேரிலும் விரலை வைத்துக்கொண்டு எங்கள் சம்வாதத்தைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். கடைசியாய் நாங்களிருவரும் எங்கள் தாவாவைக் காஜியாரிடத்துத் தெரியப்படுத்தி அவர் தீர்மானப்படி நடக்கிறதென்று ஒப்புக்கொண்டோம். காஜியார் எங்கள் முகங்களைப் பார்த்து, நாங்கள் சொல்லிய விவகா

ரங்களைக் கேட்டுக் கீழே தலையைக்கவிழ்த்துக்கொண்டு தீர்க்காலோசனை செய்த பின்னர், மறுபடியும் தலையைத் தூக்கி எங்களைப் பார்த்துச் சொல்லலானார்:

செல்வரைப்புகழ்ந்து வறியரைக் கடிந்து பேசியவரே! கேளும் முள்ளில்லாத ரோஜா புஷ்பமும் மயக்கத்தைத்தராத மதுவும் கிடையாதென்பதை நீர் அறிவீராக. பொக்கிஷத்தின் மேல் சுருண்டு படுத்துக்கிடக்கும் சர்ப்பமும், விலைமதித்தற்கரிய முத்துக்களிருக்குமிடத்தில்மனிதர்களைப்பக்ஷிக்கின்ற பெரிய ஜலஜந்துக்களுமுள்ளன. அதுபோலவே, விஷய சுகங்களையனுபவிக்கும் மத்தியில் மிருத்யுவின் ஞாபகம் வந்துவிடுகின்றது. மகா வருத்தமான மதில்களைக்கடந்துதான் நாம் சொர்க்கத்திற்குச்செல்லவேண்டியிருக்கிறது. மித்திரர்களை விரும்புகின்றவன் சத்துருக்களின் பகையை நிச்சயமாய் அடைகின்றான். சுகமும் துக்கமும், சர்ப்பமும் ரத்னமும், முள்ளும் புஷ்பமும் போல ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து கொண்டேயிருப்பன. தோட்டத்தில் பச்சை மரங்களும் பட்ட மரங்களும் கலந்திருக்கின்றதைக்காண்கிறோம். தனிகர்களுக்குள்ளும் தாங்களடைந்த நலத்தைப்பற்றிக்கடவுளை நினைப்பவர்களும் நினையாதவர்களுமுண்டு. அது போலவே ஏழைகளும், சாந்தர்களாகவும் சாந்தமில்லாதவர்களாகவுமிருக்கின்றனர். மழை பெய்யுங்காலத்தில் விழும் ஆலங்கட்டி ஒவ்வொன்றும் முத்தாக ஆய்விட்டால், கடையிலுள்ள முத்துக்களை முத்துச்சிப்பிகளாக எண்ணிக் காலால் உதைத்துத் தள்ளுவார்கள். சர்வசக்தனும் சர்வதயாபரனுமுள்ள கடவுள் வறியாரைப் போல் தாழ்மையுள்ள தனிகர்களிடத்திலும் தனிகரைப்போல் பெருந்தன்மையுள்ள எளியோரிடத்திலும் மிக்க அன்புபாராட்டுகின்றார். எளியோரைப்பார்த்து இரங்குகின்றவனே தனிகசிரேஷ்டனாவான். தனிகனை நிந்தித்து அவனைக்குறித்து அவதூறு சொல்லாத எளியவனே மனிதசிரேஷ்டனாவான். கடவுளுக்குத் தனிகன் தரித்திரன் என்ற வித்தியாசமில்லை. எவனொருவன் தன்னை நம்புகிறானோ அவனிடத்தில் அவர் பரிபூரண கிருபை வைக்கின்றார். என்று சொல்லிவிட்டுப் பிறகு பக்கிரியை நோக்கிக் காஜியார் சொன்னதாவது:—

விலக்கப்பட்ட தனவிஷய சுகங்களில் ஆழ்ந்து அதனால் தன்னை மறந்திருப்பவர் தனிகர் என்று சொல்லிய பக்கிரியே! கேள்.

உதாரகுணமென்பது இல்லாமலும் கிடைத்திருக்கும் பாக்கியங்களுக்காக நன்றியில்லாமலும் தனத்தைக் கூட்டிச்சேர்த்துப் பிறருக்குக் கொடாமல் தான் மாத்திரம் அனுபவிக்கின்ற செல்வர்கள் அனேகரிருக்கின்றார்களென்பது வாஸ்தவம். அநாவிருஷ்டியால் கொடும் பஞ்சம் வந்தாலும் ஜகமுழுதும் பிரளயத்தால் அழிந்தாலும், கவலை சிறிதுமின்றித் தனமகத்தால் தெய்வத்தையும் மறந்திருக்கின்ற தனிகர் அனேகரிருக்கின்றனர். அண்டம் புரண்டு ஜகத் அழிபினும் செல்வச்செருக்கால் எளியவர்களைப்பற்றி நினையாத பணக்காரர்களும் பலர் உளர். ஆயினும் அதிதிகளைப்பூசித்து அவர்க்கு ஆகாரமளித்து அன்னக்கொடி உயர்த்தி மலர்ந்த முகத்துடன் அவர்க்கு முகமன் கூறி, புகழைத் தரத்தக்கதாயும் தெய்வஸம்மதமாயுமிரானின்ற இகபரஸாதகமான நற்காரியத்தைச் செய்யும் தனிகர்களும் அனேகர் இருக்கின்றனர். அவர்களுக்குள் மாட்சிமைதங்கிய நமது சக்கிரவர்த்தியாகிய முஜாபர் உடின் அபுபேகர் ஒருவர். சத்துரு நிக்கிரகரும், இஸ்லாமானவர்களுக்கு நாதருமான அவர் நீடூழிகாலம் வாழ்வாராக" என்று சொல்லி முடித்தார்.

இவ்வாறு சொற்றிறத்துடன்பகர்ந்த வசனங்களைக்கேட்ட நாங்களிருவரும் அவர் சொல்லிய தீர்மானத்தை அங்கீகரித்து நாங்கள் கொண்ட அபிப்பிராயபேதத்தையும் வன்மத்தையும்மறந்து ஒருவரோடொருவர் ராஜியாய் சமாதானத்தையடைந்தோம். நாங்கள் இருவரும் சண்டையிட்டுக் கொண்டதை உத்தேசித்து அதை மறப்பதற்காக ஒருவர் மற்றவர் பாதத்தைச் சிரமேல் வைத்துக் கொண்டு ஒருவரையொருவர் உச்சிமோந்து முத்தமிட்டுக்கொண்டோம். எங்களுக்குள்ள வேற்றினம்தீர்ந்து வன்மம்போய் சமாதானமுண்டாகி எங்கள் அபிப்பிராய பேதமும் பின்வரும செய்யுளால் நீங்கிற்று:

"தார்வீஸே! தனவான்களைப்பற்றி முறையிடாதே. அவர்களைப் பற்றிக்கேவலமாய் நினைக்கிறவன் நிர்ப்பாக்கியன். தனவானே! செல்வம் உன்னிடத்திலிருக்கையில் நல்மனமுற்றவனாயிருந்துகொண்டு பிறரைத்திருப்திசெய்து நீயும் சுகமாய் வாழ்வாயாக. இப்படிச்செய்வதால் இம்மையில் சுகத்தையும் மறுமையில் உன்செய்நன்றியின் பலனையும் நிச்சயமாய் அனுபவிப்பாய்."

சி. நாராயணசாமி ஐயர், B A; L. T.

* ஐவன்ஹோ.

அரியேறன்ன அஞ்சாநெஞ்சும் ஆண்மையும் படைத்த முதலாவது ரிச்சார்ட் என்னும் அரசன் இங்கிலாந்தில் அரசாட்சி செய்தகாலத்தில், பாலஸ்தீனாவில், கிருஸ்துவின் கல்லறையை "ஸாரஸர்" என்னும் துருக்கர்கள் கைப்பற்றிக்கொண்டு, கிருஸ்துவ யாத்திரிககளைத் துன்புறுத்தி வந்தார்கள். ஐரோப்பாவிலுள்ள வீரர்கள், கிருஸ்துவ அரசர்கள் எல்லாரும் இடாலியிலுள்ள கிருஸ்துவ குருவாகிய போப் (Pope) பினால் தூண்டப்பட்டு ஒரு பெரும் படையைச்சேர்த்துக்கொண்டு துருக்கர் வசப்பட்ட அந்தப்பரிசுத்த பூமியைக்கைப்பற்றிக்கொள்ளத் திரள் திரளாகச்சென்று யுத்தம்செய்து பெருமையுற்றனர்; அவ்வாறுசென்று பெரும் கீர்த்தி பெற்றவர்களில் முதன்மையானவன் இங்கிலாந்தில் ரிச்சார்ட் சிங்கமே. அவன் பாலஸ்தீனாவுக்குப் போகுங்காலத்தில் தனக்குப்பதிலாக அரசாளும்படி தன் தம்பியாகிய ஜான் (John) என்பவனை நியமித்திருந்தான்.

இந்தஜான் தன் தமயனைப்போல கம்பீர யோக்கியதையுடையோன் அல்லன் அற்பத்தனமும் சிற்றின்ப மனுபவிக்கப் பிரியமுமுடையவனாய்ப் பிரஜைகளை வருத்திவந்தான். இக்கொடுங்கோன் மன்னன் தன்னையொத்த புல்லறிவாளர்களைத் துணைசேர்த்துக் கொண்டு நல்லோர்கள் அனைவரையும் வருத்தியதனால் ஜனங்கள் யாவரும்தங்கள் அரசனான ரிச்சார்டின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றார்கள்.

இஃதிவ்வாறாக, பாலஸ்தீனாவுக்குப் போன ரிச்சார்டின் பராக்கிரமத்திற் பொறாமைகொண்ட மற்ற ஐரோப்பிய அரசர்கள் எப்படியாவது இவனைத் தொலைத்துவிட வேண்டுமென்று பின்தொடர்ந்தார்கள். இதற்கேற்ப, ரிச்சார்ட் துர்அதிர்ஷ்டத்தால் தனியே ஊருக்குத் திரும்பிவர நேர்ந்ததால், மாறுவேஷத்துடன் ஆஸ்டிரியா தேசத்தின் வழியாய்வருகையில், எவ்வாறோ இவன் பகையரசர் இவனை இன்னானென்று அறிந்துகொண்டு ஆஸ்டிரியாவில் சிறைப் படுத்தினர். இதையறிந்த இங்கிலாந்திலுள்ள ஜனங்கள் யாவரும் தங்

* இது ஸர்வால்டர் ஸ்காட் என்னும் மேற்றிசைப் புலவர் இயற்றிய "Ivanhoe" என்ற நவீன கதையின் சார சங்கிரகம்.

கள் அரசனுக்குண்டான ஆபத்தை நீக்கும்பொருட்டு ஒரு பெருந் தொகையை மீட்சிப் பணமாகக் கொடுக்க உடன்பட்டதால் அவன் தம்பியாகிய கொடுங்கோன் மன்னனின் அரசாட்சி கொஞ்சநாள் அதிகரித்தது. இதற்குள் ஜனங்கள் பெரும் பணத்தை அனுப்பி அரசன் வருகையை எதிர்பார்த்து நின்றார்கள்.

இவ்வாறிருக்க யார்க் (York) என்னும்மாகாணத்தில் ஷேப்பீல்ட் (Sheffield) என்னும் ஊருக்குச் சமீபத்தில் பெரிய மரங்களடர்ந்த காட்டின் மத்தியில் ஸிட்ரிக் (Cedric) என்னும் ஒரு 'ஸாக்ஸன்' (Saxon) தன்மாளிகையில் வாசஞ்செய்து வந்தான். இந்த ஸிட்ரிக் வயது முதிர்ந்தவன். பராக்கிரமமும் யோக்கியதையும் உதாரகுணமும் பொருந்தியவன். மிக்க செல்வம் படைத்தவன். வழிப்போக்கர்களை உபசரிக்கும் தயாளகுணம் உடையவன். அவன் எப்போதும் பூர்வீக வழக்கங்களையும் ஆசாரங்களையும் கைவிடாதவனாகவும் அக்காலத்து நாகரீகமென்று வழங்கிய *நார்மன் (Norman) பிரஞ்சுக்காருடைய நடைகளை முற்றும்வெறுத்தவனாகவும்இருந்தான்.

ஒருநாள் வெகு அழகாயிருந்த ஒரு சாயங்காலத்தில் சூரியாஸ்தமன மாகும் நேரத்தில் காடுகள் முழுவதும் திடீரென இருள் மூடி மேகங்கள் தாழ்ந்து மழை பொழிய ஆரம்பித்தது. அச்சமயம் ஒரு மரத்தடியிலே புற்றறையில் ஸிட்ரிக்கின் பன்றிகளை மேய்ப்பவனை கர்த் என்பவன் தன் சிநேகிதனும் ஸிட்ரிக் வீட்டு விதூஷகனுமானவாம்பா (Wamba) என்பவனுடன்,சாதுக்களும் எளிய ஸாக்ஸர்களுமான தங்களை ஜயித்துத் தங்கள் சுயாதீனத்தைப் பிடுங்கிக்கொண்ட அன்னிய நாட்டு நார்மன் மிலேச்சர்களின் கொடுமைகளைப் பற்றி வெகு வெறுப்புடன் குறை கூறிக்கொண்டிருந்தான். உடனே அஸ்தமனமாகவும் மழைவருவதை யுத்தேசித்து மேய்ந்துகொண்டிருந்த தன் பன்றிகளை ஒன்று சேர்க்க கர்த் தன்கொம்பை ஊதவே, "பாங்கஸ்" என்னும் அவனுடைய நாய் பன்றிகளை ஒன்றாய்ச்

* நார்மன்:— இப்போது இங்கிலாண்டில் இருப்பவர் பூர்வீக இங்கிலாண்டு தேசத்தவர் அல்லர். பிராஞ்சு நாட்டில் நார்மண்டி என்னும் ஊரிலிருந்து வந்தவர்கள். தேகபலத்தால் பூர்வ ஜனங்களான ஸாக்ஸன்களைத் தோற்கடித்து இங்கிலாண்டை அரசாண்டு வந்தார்கள். (இந்தியரையும் ஐரோப்பியரையும் போல.)

சேர்த்தது. அவைகளை வீட்டிற்கு ஓட்டித் திரும்பும் சமயத்தில் திடீரென்று குதிரைக் காலடிச்சத்தம் கேட்டது "யாராய் இருக்கலாம்?" என்று நினைத்து இவர்கள் இருக்கையில் இரண்டு வீரர்கள் தங்களுடைய பரிவாரத்துடன் காட்டுப் பாதையில் இவர்கள் சமீபத்தில் வந்து நின்றார்கள். அவர்களில் முதலில் வந்த ஒருவன் சமீபத்தில் வாசஞ் செய்யும் ஓர் சன்னியாசி. அவன்பேருக்கு மாத்திரம் சன்னியாசியே யொழிய ஒருநாளாவது கடவுளை வழிபட்டறியான். அவனுக்கு எப்போதும் வேட்டையாடுவதும் நல்ல போஜனங்களை உண்பதும் தான் ஜபம். அவனைப்பற்றி யாவும் இவ்விருவருக்கும் நன்றாய்த் தெரியும். ஆனால் எல்லாரோடும் நிரம்ப ஸல்லாபமாகப் பேசுபவனும் எப்போதும் உற்சாகத்தோடு இருப்பவனுமாதலால் ஜனங்களெல்லாரும் அவனிடம் பிரியத்தோடு அன்புபாராட்டி வந்தார்கள். மற்றவனோ அவ்வாறின்றி நெட்டையாயும், பலமும் கனத்த சதைப்பிடிப்புமுள்ளவனாயும், வெயிலில் அலைந்ததினால் நிறம் மாறி நுட்பமான கட்பார்வையுடன் வெகு அகங்காரங் கொண்ட முகக்குறியுடையவனாயும் இருந்தான். அவன் ஒருவகை யுத்த வீரர்களுக்குத் தலைவனான *கில்பர்ட் என்ற கீர்த்திமான்.

[இன்னும் வரும்]

S. பஞ்சாபகேச சர்மா B. A., L. T.

---

*கில்பர்ட்:— பூர்வத்தில் குடிகளுக்குத் துன்பத்தையும் திருடர் முதலானவர்களால் உண்டாகும் யுத்தத்தையும் பற்றி அரசனிடம் முறையிடுவோர்களுக்கு அத்துன்பத்தினின்று நீக்குவதற்கு அரசனுக்குச் சமமான வீரர்கள் இருப்பது வழக்கம். அவர்களுடைய வேலை என்னவென்றால் ஊர் ஊராகப் போய் பார்ப்பார், பசு, பத்தினிப் பெண்டிர், கன்னிகை முதலானவர்களுக்கு உண்டாகும் துன்பத்தை நீக்கித் தங்கள் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவதேயாம். அவர்களுக்கு எங்குச் சென்றாலும் கௌரவமும் அரசரோடு சமமான ஆசனமும் உண்டு. அவர்களுக்குப்பேர் 'Knights'. அரசனிடம் முறையிட்டால், அவன் அவ்வீரரில் ஒருவனை ஒத்தாசைக்கு அனுப்புவதுவழக்கம். ஆனால் ருத்ராக்ஷப்பூனை போல் அவர்களிற் பலர் தெய்வபக்தியுள்ளவர்போல் நடித்துப் பிறரை இம்சித்து வந்தார்கள். துன்புற்றோர்க்குத் துணைபுரிவதுபோல் நடித்துப் பிறகு தாமே அத்துன்பம் நேர்ந்தோர்க்கு அதிகதுன்பத்தைக்கொடுத்து ஹிம்சிப்பவர் எத்தனைபேர்கள்! அவ்விதமான பேர்களில் கில்பர்ட் என்பவனும்ஒருவன்.

யாத்திரைக்குறிப்பு.

தர்க்கீசுவரம்.

வைத்திநாதத்திலிருந்து தர்க்கீசுவரத்திற்கு சார்ஜு ரூ 2—15—0. கல்கத்தாவுக்குப்போகும் ரயில்வண்டியேறிப்போக வேண்டும். இதற்கு ஜட்காபுலி என்னும் ஸ்டேஷனில் இறங்கிப் பிறகு வேறுவண்டி யேறவேண்டும். இது காளிதோன்றிய இடமென்று சொல்லிக் கொள்ளப்படுகிறது. இங்குக் கூலியாட்களும் பண்டாக்களும் மிகுதி. இடமும் அதிகம். சௌகரியமாகவும் கிடைக்கும். இதில் பம்பாய், கல்கத்தா லைன்கள் இரண்டும் சேர்ந்து இருப்பதினால் பம்பாய் போகிறவர்கள் கல்கத்தா ரயிலிலும், கல்கத்தா செல்வோர் பம்பாய் ரயிலிலும் ஏறிவிடுவதுண்டு இங்கு வீடுகள் மூங்கிலினாலும், சுவர்கள் துவரை மிலாறினாலும் கட்டி மேலே மண் பூசப்பட்டு இருக்கின்றன. மேற்கூரைகள் மூலைச்சார்பாய் இல்லாமல் ஓடம் போலிருக்கும். வீடு தீப்பற்றி எரிந்தால் சுவர்களும் பற்றி எரிந்து விடும். ஆகையால் அங்குள்ளோர் அக்கினி பாதையைத் தடுக்க அதிஜாக்கிரதை யுள்ளவர்களா யிருப்பார்கள்.

கல்கத்தா.

தர்க்கீசுவரத்திலிருந்து கல்கத்தாவுக்கு சார்ஜு ரூ 0—8—6. மறுபடியும் ஜட்காபுலி வந்துதான் கல்கத்தாவுக்கு வேறு வண்டி யேறவேண்டும். காசியிலிருந்து கல்கத்தாவுக்கு சார்ஜு ரூ 2—15—9. சென்னைக்கும்கல்கத்தாவுக்கும் சார்ஜு ரூ 28-10-9. சென்னையிலிருக்கும் மிருகசாலையிலுள்ள மிருகங்கள் இவ்விடம் கோடீசுவரர்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் பார்க்கலாம். இங்கு தோப்புத்திறவுகள் கிடையா. எங்கும் வீடுகள்தான். இங்கே ஐந்து நாடகக் கொட்டகைகள் உள. கொட்டகை ஒவ்வொன்றும் சென்னை சென்றல் போஸ்டாபீஸ் போன்றது. நாடகம் பார்க்க சார்ஜ் புருஷர்களைவிடப் பெண்டுகளுக்கு இரண்டுமடங்கு. கல்கத்தாவில் ஜட்கா வண்டிகள் பாட்டு வண்டிகள் கிடையா. யாவும் கோச்சுவண்டி

களே. அவ்வூர் முனிசிபாலிடியாராலும், வீட்டோர் அநேகராலும் காந்த விளக்குகளால் ஏற்றப்படுகிறது. பெரிய தெருக்களில் ஐந்து நிமிஷத்திற் கொருதரம் டிராம் வண்டி ஓடிக்கொண்டேயிருக்கும். பளிங்கினாற் கட்டப்பட்ட கொட்டக்காரன் கோவில் பார்க்கத்தக்கது. இதைத்தவிர தங்கத்தினால் சித்திரமெழுதப் பட்ட கோடீசுவரர் வீடு, கவர்னர் மஹால், பட்டு யந்திரசாலை, காலேஜுகள், இருட்டறை முதலியனவும் காட்சிக்குரிய இடங்களே. மல்லி டிஸ்டிரிக்ட்டில் பாடசாரிகளுக்கிறங்க இரண்டு மூன்று மெத்தையுள்ள வசதியான கட்டிடம் இருக்கிறது. நாட்டுக்கோட்டையார் மடம் மிக வசதியுள்ளது. வாசலில் கங்கையாறு போகிறது. அவர்களைக் கேட்டால் தடையின்றி இருக்கச்சொல்வார்கள். வாடகைகிடையாது. சத்திரத்தில் எங்கு வேண்டுமென்றாலும் இறங்கலாம். வாடகை ஒருநாள் இருப்பினும் அல்லது ஒருமாதமிருப்பினும் ரூ 25 அல்லது ரூ 30 கொடுக்கவேண்டும். இதற்குப் பதிலாக பட்டணத்திற்கு எட்டு மயிலுள்ள காளிகட்டம் என்றவூரில் இறங்கலாம். அதற்கும் பட்டணத்திற்கும் டிராம்சார்ஜு அணா இரண்டே. பங்குனி உத்தரத்திற்கு வருஷா வருஷம் புதுக்கோட்டையிலிருந்து இரண்டுஜதை மேளம் கொண்டுபோய் பதினாயிரரூபாவரை செலவழித்துமேஷ உற்சவத்தை நடத்துகிறார்கள். இம்மடத்தாரிடம் அயோத்திக்கும் கடிதம் வாங்கிக்கொள்ளலாம். நல்லெண்ணெய் இவ்விடம் வாங்கிக்கொள்ள வேண்டியது.

அயோத்தி.

கல்கத்தாவிலிருந்து அயோத்திக்குச் சார்ஜு ரூ 7—12—0. காசியிலிருந்து அயோத்திக்கு சார்ஜு ரூ 1—12—3. ரயில்வே ஸ்டேஷனுக்கும், அயோத்திக்கும் நாலுமைல். கோச்சுகளும், கோடாவண்டிகளும் நாட்டுவண்டிகளும், ரிக்ஷாக்களும், கிடைக்கும். ராஜாவின் அரண்மனை, மகாதேவர் கோவில், அனுமார்கோவில், ராமர் ஜனனம், தசரதர் மாளிகை, ராமர் மாலை மாற்றிக்கொண்ட இடம், கைகேயி கூனி இருக்குமிடம், ஸ்ரீராமர் பட்டாபிஷேக மண்டபம், சயன மண்டபம், கச்சேரிமண்டபம், வசிஷ்டருக்குச் சீதைரொட்டி செய்துகொடுத்த இடம் முதலியன காணத்தக்கது. இலக்ஷ்மண

கட்டம் என்னும் தீர்த்தத்தில் தங்குவதற்குமடங்களுமிருக்கின்றன. ஷை தீர்த்தத்தில்தான் ஸ்ரீராமர், சீதை வைகுண்டம் போன இடம். இங்குள்ள நதிகளில் ஆமைகள் விசேஷம். அவை பார்க்கப் பயங்கரமாயிருப்பினும் ஒன்றும் செய்யா. இதற்கு 10 மைலுக்கப்பால் "ராம கட்டம்" என்றஓர் தடாகம் உண்டு. அதுதான் ஸ்ரீராமர் முதலாயினோர் வைகுண்டம் போன போது அன்னோருடைய ஆயுதங்கள் போய் மறைந்த இடமெனச் சொல்லப்படுகிறது. அவ்விடத்தில் தமிழ்பேசும் ஸாது ஒருவர் சதாநிஷ்டையிலிருக்கிறார். தசரதர் புத்திர காமேஷ்டியாகம் செய்த இடத்தில் மண்ணை எடுத்துப்புடைத்தால் கல் அரிசியும் கற்கோதுமையும் அகப்படும். அயோத்திக்கு 9 மைல் தூரத்தில் நந்திகிராமம் உள்ளது. அதுதான், ஸ்ரீராமர் வனவாசம் செய்தகாலத்தில் பரதர் ராஜ்யம் ஆண்ட இடமாம். இதற்கு 4 மைல் தூரத்தில் பாரத்துவாச ஆச்சிரமம் இருக்கிறது. அயோத்திக்கு ஒருமைல் தூரத்தில் ரகுநாதசுவாமிகளின் ஆச்சிரமம். அயோத்தியில் ஏகாதசிதவிர மற்றெந்தத்தினத்தில் ஸ்ரீராமர்கோவிலுக்குப் போனாலும் தலைக்கு $1\frac{1}{4}$ரூபா கொடுத்தால் தான் தரிசனம். இங்கிருந்து மிதிலை என்னும் ஜனகப்பூர் போக ஆற்றுக்கு அக்கரைபோய் ரயில் ஏறவேண்டும். நடந்து போகும்போது அசாத்தியக் காற்றால் மணல் வந்து விழும். இனி ஜலகஷ்டம்.

கமலாலயன்.

சமாசாரக்கொத்து.

ஜூலை 14உ சென்னைக் கவர்னரால் கோயமுத்தூரில் வியவசாயக் காலேஜ் கட்டிடம் திறக்கப்பட்டது. இது 14700 ரூபா செலவுசெய்து கட்டப்பட்டதாம்.

ஸ்ரீ லாலா வஜ்பத்ராய் வருகிற காங்கிரஸை லாகூரில் கூட்டுவது தேசக்ஷேமத்துக்கு அநுகூலமும், அறிவுடைய செய்கையும் ஆகமாட்டாதென்று அபிப்பிராயப்படுகிறார்.

பரோடா மஹாராஜாவாகிய ஸ்ரீஸையாஜிராவ் கைக்குவார் அவர்கள் பட்டுப்பூச்சி வளர்ப்பதற்காகத் தம்முடைய சம்ஸ்தானத்தில் சோங்காட், வியாரா என்ற இரண்டு இடங்களில் பண்ணைகள் ஸ்தாபித்திருக்கின்றார்.

"கி. பி. 477-ல் இகம்விட்டுப் பாஞ்சென்ற மகானுகிய ஸ்ரீகௌத்தம புத்தரின் அஸ்தி சாம்பல் கனிஷ்கா சக்கரவர்த்தியின் காலத்தில், பிஷாவாருக்குச் சமீபத்திலே ஒரு கோபுரத்தின் ஸ்தூபியிலே உள்ள ஓர் வெண்கலப் பெட்டிக்குள் பளிங்குப் பாத்திரத்தில் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிறது." என்ற சீனதேசத்து பௌத்தயாத்திரிகராகிய ஹையூன் த்ஸாங்கின் வாக்கு மெய்யாகிவிட்டது. எவ்வாறெனில் பழையகால நாகரிகச்சின்னசோதகர்கள் சென்றமீ அதே இடத்திலிருந்து அவ்வஸ்தியை எடுத்திருக்கிறார்கள். அது அவ்வெண்கலப்பெட்டியோடு விம்லாவுக்கு கவர்னர் ஜனரல் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இப்பெட்டியில் நான்கு எலும்புகள் இருக்கின்றன. இந்நான்கெலும்பையும் சாம்பலையும் பிரபல புத்தஸ்தலங்களாகிய இலங்கை, பர்மா, சீனு, ஜப்பான் ஆகிய நான்கிடங்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கப்போகிறார்களாம். ஸ்ரீபுத்த பகவான் ஸ்ரீமகாவிஷ்ணுவின் திரு அவதாரமாதலால் இவ்வாறு செய்வது மதாபிமானமுள்ள இந்துக்களுக்கு மனவருத்தத்தைத் தராமல் இராது. கவர்ன்மெண்டார் இந்தியாவிலேயே அஃதிருக்கும்படி செய்வார்களாக.

கூடியசீக்கிரத்தில் சென்னையில் ஐஸ்ஹவுஸ் பக்கத்தில் ஒரு கண்ணாடிச் சாலை கட்டப்படும். சுதேசிகளே அதனை ஸ்தாபித்து நடத்துபவர்கள் என்றறிய மட்டற்ற மகிழ்ச்சி எய்துகின்றோம.

பர்மாவில் ஹென்ஸாடா ஜில்லாவைச் சேர்ந்த ஸாவன்பட்டினம் வெள்ளத்தில் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. கடைத்தெருவில் வெள்ளம கட்டிடங்களின் கூரையைத் தொட்டுக்கொண்டுபோகிறதாம். அவ்வூரில் இவ்வெள்ளம் இன்னும் இரண்டுமாதம் நிற்கும்போலிருக்கிறது. கச்சேரிகள் தோணிவீடுகளில் நடைபெறுகின்றன.

தூத்துக்குடி சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்குச் சொந்தமான "காலியா" என்னும் கப்பலுக்குக் கடைசித்தவணையாகச் செலுத்தவேண்டிய பணம் ஆகஸ்டுமீ 11வ புதன்கிழமை யன்று செலுத்தியாய்விட்டது. இனி இக்கம்பெனியாருக்கு இக்கப்பல் சொந்தமாகிவிட்டது. சீக்கிரத்தில் 2 கப்பல்களும் வேலைசெய்ய ஆரம்பித்துவிடும் என்பதறிந்து அகமகிழ்கின்றோம்.

திரான்ஸ்வாலில் இந்தியர்களுக்காக அநேக துன்பங்களை அனுபவிக்கும் ஸ்ரீ காந்தி இப்பொழுது லண்டனுக்குப் போயிருக்கிறார். அவர் தற்காலத்தில் இந்தியர்களபடும் ஆற்றொணுக்கொடுமையை அகற்ற ஏதாவது வழியுண்டா என்றுபார்ப்பதற்காகவே அங்குப்போயிருக்கின்றனராம்.

குரங்குகள் கொலையாளியைக் கண்டுபிடித்தன:—ஷோலாம்பூர் ஜில்லாவைச் சேர்ந்த மேடா தாலூகா யொகராஜ கிராமத்தில் குரங்காட்டி ஒருவன் பிழைப்புக்காக 3 குரங்குகளும் ஓர் ஆட்டுக்கடாவும் வைத்துக்கொண்டு பிச்சைவாங்கிவரும்போது சில துஷ்டர்கள் ஆட்டைவிலைக்குக்கேட்க அவன் மறுத்துவிட்டான். ஒரு நாள் மற்றொரு குக்கிராமத்துக்குப்போகிற வழியில் துஷ்டர்கள் வழிமறித்துக்கொண்டு இம்சைசெய்ய, அவன் "என்னிடம் ரூபா 4 இருக்கிறது. அதை வாங்கிக்கொண்டு என்னையும் என் குரங்குகளையும் விட்டுவிடுங்கள்" என்று கேட்கவே துஷ்டர்கள் அவனை நன்றாய் அடித்துக்கொன்று ஓரிடத்தில் புதைத்துவிட்டு ஆட்டையும் கொன்று மாமிசம் தோல் முதலியவைகளை எடுத்துக்கொண்டு வீட்டைநோக்கிச் சென்றுவிட்டார்கள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த 3 குரங்குகளில் ஒன்று அவனைப் பின்தொடர்ந்து வீட்டு அடையாளத்தை கண்டுகொண்டது. 2-வது பிணம் புதைத்தவிடத்தில் காவல்காத்துக்கொண்டிருந்தது. 3-வது ஆடு வெட்டின விடத்தில் காவல் புரிந்தது. இப்படியிருக்க முதலாவது குரங்கு வீட்டு அடையாளம் பார்த்துக்கொண்டபின் நடு ரோட்டில் வந்து போலீஸ்காரனை எதிர்பார்த்து இருந்தது. அவ்வூர் போலீஸ்காரன் வழக்கம்போல் கிராமவிசாரணைக்குப்போக வருகையில் முதல் குரங்கு அவனிடத்தில் நெருங்கிப்போய் வேஷ்டியை வாயினால்கவ்விக்கொண்டு வீச் வீச் என்று தன் பாஷையில் பேசி அழைத்துச்சென்று தன் எஜமானன் புதைக்கப்பட்ட விடத்தைக்காண்பித்தது. 2-வது குரங்கு பிணம் மூடப்பட்ட விடம் காட்டி மண்ணைத்தோண்டி எஜமானனைக் காண்பித்தது. உடனே அவன் பயந்துபோய் ஒன்றும் பேசாமல் நின்றுவிட்டான். 2 குரங்குகளும் போலீஸ்காரனை விடாமல் துணியைப் பிடித்துக்கொண்டு ஆடு வெட்டின இடத்திற்குப்போய்க்காண்பித்தது. இவ்விடத்திலிருந்த குரங்கு ஆடு வெட்டின இடத்தையும் எலும்பையும் காண்பித்துவிட்டு மூன்று குரங்குகளும் சேர்ந்து கொலைப்பாதகன் வீடு நோக்கிச்சென்று அவன்வீட்டில் போய் அவனிருப்பதுகண்டு அவன்மேல் விழுந்து கீறவும் கடிக்கவும ஆரம்பித்து கூசசல்போட்டன. இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டுவந்த போலீஸ்காரன் இவன்தான் குற்றவாளியென்றுதெரிந்துகொண்டு உடனே அவனைக் கைதிசெய்ய அவனை ஷோலாப்பூர் கோட்டை ஜயிலில் வைத்திருக்கிறார்கள். குரங்குகளுமிருக்கின்றன. இவ்வேடிக்கை பார்க்க ஆயிரக்கணக்கான ஜனங்கள் வருகிறார்கள். விசாரணையின்போது குரங்குகள் தம் பாஷையில் சொல்லப்போகின்றனவாம்! பார்த்தீர்களா மிருகஜாதியாயிருந்தாலும் தன் எஜமானனிடம் வைத்த விசுவாசத்தை! கொலைபாதகனைக் கண்டு போலீஸாரிடம் ஒப்புவித்ததும் ஓர் ஆச்சரியமே! ஸ்பென்ஸர், டார்வின்,இவர்களுடைய ஜீவபரிணாமக் கொள்கைக்கு இது ஒரு அத்தாட்சிபோலும்!

மதுரை வர்த்தமானம்.

விஜயம்:—ஸிலோன் ஸொலிஸிடர்ஜெனரலாகிய ஆனரபிள் ஸ்ரீ பொ. இராமநாதன் அவர்கள் K. C. C M. G. ஆகஸ்டுமீ 18உ மதுரைக்கு விஜயமாவார். இவரது வரவு நல்வரவாகுக. இவர் இவ்வூரில் இரண்டொருதிவ்யப் பிரசங்கங்களேனும் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருட்டு:—மதுரையில் வரவர திருட்டு மிகுந்து வருகிறதென்பது பின்வரும் விஷயங்களாலறியலாகும்:—(1) அந்நியதேசங்களிலிருந்து மதுரைக்கு வரும் கனவான்களுக்குக் காட்சிக்குரிய கட்டிடம் காண்பிக்கும் (City-guide) மதுரைநாயகம்பிள்ளையின் மகன் நடராஜன் என்னும்பையன் ஜூலைமீ 22உ இரவு தன்வீட்டு வாசலில் படுத்துறங்கினபோது சில துஷ்டர்கள் அவன் வாயில் துணிவைத்தடைத்து அவனை குண்டுகட்டாக கட்டித் தூக்கிச்சென்று ஓர் ஆழமான சாக்கடையிற் போட்டு நகைகள் யாவையும் அபகரித்துக்கொண்டு பையனைக்கழுத்தைப் பிசைந்தனர். பையன் ஈசுவர கிருபையால் பிழைத்துவிட்டான்.

(2) 23உ யன்று கமலத்தோப்பு அக்கிராரத்தில் வசிக்கும் "தேங்காய் ஜோஸியர்" என்ற ஜோஸ்யர் நரசிம்ம ஐயங்காரின் 10 வயதுள்ளபையனும் சிந்தாமணியை வசிப்பிடமாகக்கொண்டு ஸெயின்ட்மேரிகலாசாலையில் வாசித்து வரும் 9வயதுள்ள கோபு என்ற பையனும் அயோக்கியர்கள் சிலரால் முறையே வலைவீசினதெப்பக்குளத்திற்கும், மணிநகரத்தண்டையுள்ளகற்றுழைக்காட்டுக்கும் நயவஞ்சமாக அழைத்துக்கொண்டு போகப்பட்டு நகைகளைப்பறிகொடுத்து நல்லவேளையாய் உயிருடனுவது வீட்டுக்குத்திரும்பினர்

(3) ஆகஸ்டுமீ 2உ ஒரு போக்கிலி சந்தைப்பேட்டைத்தெருவிலிருக்கும் காலேஜ் கணித ஆசிரியராகிய ஸ்ரீ கி. கணபதி அய்யாவர்கள் பி எ., எல். டி. யின் வீட்டில் பகல் 3 மணிக்குப் புகுந்து அவரது 10வயதுள்ள பெண்ணின் நகையையும் அகப்பட்ட பொருள்களையும் அடித்துக்கொண்டு போக முயன்றும் அச்சிறுமியின் அதிசாமர்த்தியத்தால் அவ்வாறு செய்யக் கூடாமற் போயிற்று. இந்நான்கு சம்பவங்களைப்போல இதுகாறும் எத்தனை நடந்திருக்கின்றனவோ அறியேம். பழிபாவத்திற்கஞ்சா இப்பாதகர்கள் இன்னும் பிடிபடாதிருப்பது நமக்கு விசனத்தையும் வியப்பையும் தருகிறது. போக்கிலிகள் இப்பஞ்சகாலத்தில் ஊரெங்கும் திரிவது தெரிந்தே இருப்பதால் ஜனங்கள் மோசம் போகாமல் அதிஜாக்கிரதையுடன் இருப்பார்களாக.

இடியால் மாண்டனர்:—ஆகஸ்டுமீ 4உ மாலை இடித்த பேரிடியில் இரண்டு வங்க ஸ்திரீகளும் கோரிப்பாளையத்தான் ஒருவனும் இறந்துபோயினர். மற்றொரு ஆளுக்குப் பார்வை முற்றிலும் போய்விட்டது.